செய்தி வெளியீடு **நாள் : 15.01.2026**

கொளத்தூர் வண்ண மீன் வர்த்தக மையத்தில், பொங்கல் திருநாளை முன்னிட்டு 15.01.2026 முதல் 18.01.2026 வரை நடைபெறவுள்ள "வண்ண மீன் வர்த்தகத் திருவிழாவின்" தொடக்க விழாவில் 100 கடை உரிமையாளர்களுக்கு பொங்கல் சிறப்பு தொகுப்புகள் வழங்கப்பட்டது.

****

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி இன்று (15.01.2026) வில்லிவாக்கம் சட்டமன்ற தொகுதி, சிவசக்தி நகர், பாடி மேம்பாலம் அருகில் **கொளத்தூர் வண்ண மீன் வர்த்தக மையத்தில், பொங்கல் திருநாளை முன்னிட்டு 15.01.2026 முதல் 18.01.2026 வரை நடைபெறவுள்ள "வண்ண மீன் வர்த்தகத் திருவிழாவின்"** தொடக்க விழாவில் கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை செயலாளர் டாக்டர் ந.சுப்பையன், இ.ஆ.ப., சிஎம்டிஏ முதன்மை செயல் அலுவலர் திரு.அ.சிவஞானம், இ.ஆ.ப., மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் திரு.க.வீ.முரளிதரன், இ.ஆ.ப., மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., மண்டலக் குழுத்தலைவர்கள் திரு.கூ.பீ.ஜெயின், திருமதி.சரிதா மகேஷ்குமார் ஆகியோர் **வண்ண மீன் வர்த்தக மையத்தில் உள்ள 100 கடை உரிமையாளர்களுக்கு பொங்கல் சிறப்பு தொகுப்புகளை வழங்கி, கோலப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினர்.**

சர்வதேச தரத்திலான கொளத்தூர் வண்ண மீன் வர்த்தக மையத்தில் கண்கவர் வண்ணங்களில் நன்னீர் மற்றும் கடல் மீன்கள், வண்ண மீன் தொட்டிகள் மற்றும் உபகரணங்கள், 150க்கும் மேற்பட்ட வண்ண மீன் கடைகள், நீர்வாழ் காட்சியகம், உணவுக் கூடம், விளையாட்டுப் பகுதி மற்றும் வாகனங்கள் நிறுத்துவதற்கான வசதி உள்ளது. மேலும் வண்ணமின் வர்த்தக திருவிழாவில் 16.01.2026 & 17.01.2026 ஆகிய இரண்டு நாட்களில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான போட்டிகள் நடைபெறுகின்றன இதில் ஓவியம் மற்றும் வண்ணம் தீட்டுதல் போட்டி, சுவரொட்டி போட்டி (Posters Making) மற்றும் பேச்சுப் போட்டி. மேலும், வண்ணமீன் விற்பனை கடைகளுக்கு இடையிலான போட்டிகளில் சிறந்த நீர்வாழ்தாவர வண்ணமீன் தொட்டி, சிறந்த வண்ணமீன் தொட்டி, சிறந்த வண்ணமீன் கடை மற்றும் பொது மக்களுக்கு வினாடி வினா போட்டி வாசகப் போட்டி மற்றும் ரங்கோலி போட்டி ஆகியவை நடைபெறவுள்ளன.

இன்று நடைபெற்ற ரங்கோலி போட்டியில் முதல் பரிசாக திருமதி.ஆர்த்தி அவர்களுக்கும், இரண்டாம் பரிசு செல்வி.மகேஸ்வரி அவர்களுக்கும், மூன்றாம் பரிசாக செல்வி.நிலக்ஷி, மற்றும் செல்வி.ரித்திகா ஆகியோர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் மாமன்ற உறுப்பினர்கள் திரு.நாகராஜன், திருமதி.சுதா தீனதயாளன், திரு.செம்மொழி, உள்ளாட்சிப் பிரதிநிதிகள் திரு.வாசு, திருமதி.சாவித்திரி வீரராகவன், மீன்வளத்துறை இணை இயக்குநர்கள் திருமதி.ரீனா செல்வி, திருமதி.ரேச்சல், தமிழ்நாடு வண்ணமீன் உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் நல சங்கத்தின் மாநிலத் தலைவர் திரு.ராஜராஜன், கடை உரிமையாளர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.